செ.வெ.எண்: 121/2017 நாள்: 16.02.2017

# செய்திக் குறிப்பு

## மாவட்ட அளவிலான கலைப் போட்டிகள் 2016

தமிழ்நாடு அரசு கலை பண்பாட்டுத் துறையின்கீழ் இயங்கி வரும் மாவட்ட சவகர் சிறுவர் மன்றங்களில் 5 வயது முதல் 16 வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கு வார விடுமுறை நாள்களான சனிக்கிழமை அன்று மாலை 4.00 மணி முதல் 6.00 மணி வரையிலும் ஞாயிற்றுக் கிழமை அன்று காலை 10.00 மணி முதல் 12.00 மணி வரையிலும் குரலிசை, பரத நாட்டியம், ஓவியம் மற்றும் சிலம்பம் ஆகிய கலைப் பயிற்சி வகுப்புகள் நாகர்கோவில் எஸ்.எல்.பி. அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளியில் நடத்தப் பட்டு வருகிறது. இச்சவகர் சிறுவர் மன்றத்தின் வாயிலாக, குழந்தைகளிடம் மறைந்து கிடக்கும் ஆக்கப்பூர்வமான கலைகளை வெளிக் கொணர, அரசு ஒவ்வொரு ஆண்டும் மாவட்டம் மற்றும் மாநில அளவிலான கலைப் போட்டிகள் நடத்தி பரிசுகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கி வருகின்றது.

மாவட்ட அளவில் பாட்டு, பரதநாட்டியம், கிராமிய நடனம் மற்றும் ஓவியப் பிரிவுகளில் 5-8, 9-12, 13-16 ஆகிய வயதுப் பிரிவுகளில் போட்டிகள் நடைபெறும். இப்போட்டிகளில் 9-12, 13-16 ஆகிய வயதுப் பிரிவுகளில் முதலிடம் பெறும் குழந்தைகளை மாநில அளவில் நடைபெறும் கலைப் போட்டிக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளார்கள்.

### 1. பரதநாட்டியம்

பரதநாட்டியம், குச்சிப்புடி, மோகினி ஆட்டம் போன்ற நடனங்களும் ஆடலாம். முழு ஒப்பனை மற்றும் உரிய உடைகளுடன் நடனம் இருத்தல் திரைப்படப் பாடல்களுக்கான நடனங்கள் (கர்னாடக இசை பாடல்களுக்கான திரைப்பட நடனங்கள் தவிர்த்து) மேற்கத்திய நடனங்கள் மற்றும் குழு நடனங்கள் அனுமதியில்லை. பக்கவாத்தியங்களையோ, ஒலி நாடாக்களையோ பயன்படுத்திக் கொள்ளலாம். இவற்றை போட்டியில் பங்கேற்பவர்களே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். குறைந்த பட்சம் 3 நிமிடங்கள் முதல் அதிக பட்சம் 5 நிமிடங்கள் வரை நடனமாட அனுமதிக்கப்படும்.

### 2. கிராமிய நடனம் (நாட்டுப்புறக்கலை)

தமிழகத்தின் மாண்பினை வெளிப்படுத்தும் கிராமியக்கலை நடனங்கள் ஆடலாம். முழு ஒப்பனை மற்றும் உரிய உடைகளுடன் நடனம் இருத்தல் வேண்டும் திரைப்படப் பாடல்களுக்கான நடனங்கள் (கிராமிய இசை பாடல்களுக்கான திரைப்பட நடனங்கள் தவிர்த்து) மற்றும் குழு நடனங்கள் அனுமதியில்லை. பக்கவாத்தியங்களையோ, ஒலி நாடாக்களையோ பயன்படுத்திக் கொள்ளலாம். இவற்றை போட்டியில் பங்கேற்பவர்களே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். குறைந்த பட்சம் 3 நிமிடங்கள் முதல் அதிக பட்சம் 5 நிமிடங்கள் வரை நடனமாட அனுமதிக்கப்படும்.

## 3. குரலிசை

கர்நாடக இசை, தேசியப் பாடல்கள், சமூக விழிப்புணர்ச்சி பாடல்கள், நாட்டுப்புறப் பாடல்கள் ஆகியவற்றில் தமிழ் பாடல்கள் மட்டுமே பாட வேண்டும். பக்கவாத்தியக் கருவிகளை பாடுபவர்கள் மட்டுமே பயன்படுத்திக் கொள்ளலாம். மேற்கத்திய இசை, திரைப்பட பாடல்கள், குழுப்பாடல்கள், அனுமதியில்லை. குறைந்த பட்சம் 3 நிமிடங்கள் முதல் அதிக பட்சம் 5 நிமிடங்கள் வரை பாடிட அனுமதிக்கப்படும். ஒலி பெருக்கியைப் பயன்படுத்தக் கூடாது.

## 4. ஓவியம்

40X30 செ.மீ அளவுள்ள ஓவியத் தாள்களையே பயன்படுத்த வேண்டும். பென்சில், கிரையான், வண்ணங்கள், போஸ்டர் கலர், வாட்டர் கலர் பெயிண்டிங் என எவ்வகையிலும் ஓவியங்கள் அமையலாம். ஓவியத்தாள், வண்ணங்கள் தூரிகைகள் உட்பட தேவையானவற்றைப் போட்டியாளர்களே கொண்டு வருதல் வேண்டும். குழுவாக ஓவியங்கள் வரைய அனுமதியில்லை. ஒவ்வொரு வயது வகைக்கும் தனித் தனியாக தலைப்புகள் போட்டி தொடங்கும் போது அறிவிக்கப்படும்.

## 1. வயது விவரம் (01.06.2016 அன்று உள்ளபடி)

அ. 5 முதல் 8 வயது பிரிவு ___ 1.6.2008 முதல் 31.05.2011 வரை
ஆ. 9 முதல் 12 வயது பிரிவு ___ 1.6.2004 முதல் 31.05.2008 வரை
இ. 13 முதல் 16 வயது பிரிவு ___ 1.6.2000 முதல் 31.05.2004 வரை

போட்டிகளில் பங்கு பெறும் மாணவர்கள் அனைவருக்கும் பங்கேற்புச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

இப்போட்டிகளில் கலந்து கொள்கின்ற கன்னியாகுமரி மாவட்டத்தை சேர்ந்த 5-8, 9-12, 13-16 வயதுப்பிரிவுகளில் உள்ள மாணவர்கள் தங்களது வயதுச் சான்றுகளுடன் நாகர்கோவில் எஸ்.எல்.பி. அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளியில் 19-02-2017 (ஞாயிற்று கிழமை) அன்று காலை 9.00 மணியளவில் நடைபெற உள்ள போட்டிகளில் கலந்து கொள்ளுமாறு திருநெல்வேலி மண்டலக் கலை பண்பாட்டு மைய உதவி இயக்குநர் திரு.மு.க.சுந்தர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.